www.tamilarangam.net

# குற்றவாளிக் கூண்டில் ஜெயவர்த்தனே அரசு

— தோழர் எம். கல்யாணசுந்தரம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குற்றவாளிக் கூண்டில் ஜெயவர்த்தனே அரசு

தோழர்

எம். கல்யாணசுந்தரம்

பிரச்சாரச் செய்திப்பிரிவு

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற் பதிப்பு :

தோழர் எம். கல்யாணசுந்தரத்தின்

பவள விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்டது.

அக்டோபர், 20—1984

அட்டைப்படம் :

**ஓவியர் சேய்**

விற்பனையாளர்கள் :

**ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்**

**அஞ்சல் பெட்டி எண் : 5551**

**சென்னை-94.**

# தோழர் எம். கே.யின்

## புரட்சிகர அனுபவங்களைச் சுவீகரித்துக்கொள்வோம்

அக்டோபர் 20-ல் இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சியின் முதுபெருந் தோழர் கல்யாணசுந்தரம் அவர்கள் பவளவிழா காண்கிறார்கள்.

சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கமும், தொழிலாளர் வர்க்க இயக்கமும் தமது உன்னத தோழரை உரிமையோடு வாழ்த்துகின்றன.

தோழர்கள் **ஜீவானந்தம், பாலதண்டாயுதம்** போன்ற மகத்துவமிக்க கம்யூனிஸ்டுக்களை சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு வழங்கிய தமிழகம்தான் தோழர் எம். கே. அவர்களையும் எமக்குத் தந்துள்ளது.

இந்தியமக்கள் பிரிட்டிஷ் காலனியாதிக்க விலங்குகள் தகர்க்க விழித்துக் கொண்டபோது தோழர் எம்.கே.யும் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வு பெற்றுத் தேச விடுதலை இயக்கத்தில் பங்கேற்றார்.

இந்திய தொழிலாளர்வர்க்கத்தின் மத்தியிலும், பரந்துபட்ட மக்களிடமும் கம்யூனிசக் கருத்துக்களை ஆழ விதைக்கும் பணியில் நீண்டகால அனுபவம் கொண்டவர் தோழர் எம். கே. தோழர் அவர்களின் புரட்சிகர அனுபவங்கள் தொழிலாளர் வர்க்க ஆட்சியதிகாரத்தை இலக்காகக் கொண்டு சர்வதேசமெங்கும் போராடும் படை வரிசைகள் சுவீகரித்துக் கொள்ள வேண்டியவையாகும்.

தேசியக் கண்கொண்டு மார்க்சிய விஞ்ஞானத்தைப் பார்த்து, இந்தியவகை மார்க்சியம், ஈழவகை மார்க்சியம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனப் புலம்பித் திரியும் திருத்தல்வாதிகளிடம் விழிப் போடிருக்க வேண்டிய கால கட்டமிது.

தேசியச் சூழ்நிலைகளைக் கவனத்தில் எடுத்து இக் குறிப்பிட்ட தன்மைகளைச் சர்வதேச விஞ்ஞானமான மார்க்சிய, லெனினியத்தின் பொதுவான தன்மையுடன் இணைத்துக் கொள்ளும் சரியான வழி முறையானது மார்க்சியத்தைச் செழுமைப்படுத்துவது என்னும் பெய ரால் நிராகரிக்கப்படுகிறது. ஒருதேசத்தில் நிலவும் குறிப் பிட்ட தன்மைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, பொதுத்தன்மைகளைக் குறுகிய தன்மைகளுக்குள் மூழ்க விடும் திருத்தல்வாதிகள் **தமது விருப்பு வெறுப்புகளுக்காய் மார்க்சிய, லெனினிய விஞ்ஞானத்தை உபயோகப்படுத்த முனைகின்றார்கள்.**

எனவேதான் மார்க்சியத்தின் வெளிப்படையான எதிரிகளைவிட, மார்க்சிய வேடமிட்ட மார்க்சியத்தின் பகைவர்களிடம் நாம் விழிப்போடிருக்க வேண்டியுள்ளது.

சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்க அனுபவங்களைக் கற் றுக் கொள்வதும், அப்புரட்சிகர மரபுகளைச் சுவீகரித்துக் கொள்வதும் எமது கடமை என்பதை உணரவேண்டும்.

இலங்கையில் குமுறி வெடித்துள்ள ஈழமக்கள் விடுத லைப் போராட்டம் பற்றிய தோழர் எம்.கே. அவர்களது அணுகுமுறை புரட்சிகரமானது.

சிறீலங்கா பேரினவாத அரசு ஈழமக்களைக் கொன்று குவிக்க பிரகடனமில்லாத அழிவுப்போரைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இலங்கைத்தீவில் மனித நாகரீகங்களுக்கு நடத்தப்படும் மரண ஊர்வலத்துக்குச் சர்வதேசமெங்கு முள்ள முற்போக்கு ஜனநாயக சக்திகள் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றன.

ஏகாதிபத்திய அமெரிக்காவாலும், அதன் போர்வெறி இராணுவக் கூட்டாளிகளாலும் பலப்படுத்தப்படும் சிறீலங்காவின் ஆயுதப்படைகளுக்கு எதிராக—வாழ்வதற் காக, ஜனநாயகம், சமாதானம் என்பவற்றுக்காக ஈழமக் கள் வீரம் செறிந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.



இத்தகைய புரட்சிகர விடுதலைப் போராட்டத்திற்கு இந்திய மக்கள் தமது செயலூக்கமான பேராதரவை வழங்குகிறார்கள்.

**எமது மக்களின் ஜீவமரணப் போராட்டம் நியாயமா னது. ஏகாதிபத்தியத்திற்கும், சுரண்டல்உறவு முறைகளுக் கும் எதிரானது** என்பதைச் சர்வதேச முற்போக்குச் சக்தி கள் அங்கீகரிக்கின்றன.

தோழர் எம்.கே. ஈழவிடுதலைப் போராட்டம்பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் அவர் தமிழர் என்பதை விடவும், ஒரு **சர்வதேசியவாதி** என்றவகையில் அவரது அணுகு முறையைத் தெளிவாக்குகின்றன.

தோழர் எம்.கே. அவர்கள் ஈழப் பிரச்சனை பற்றித் தெரிவித்த கருத்துக்கள் சில எமது பத்திரிகைக் குழுவால் தொகுக்கப்பட்டுள்ளன.

தோழர் எம்.கே. ஈழவிடுதலைப் போராட்டம் பற்றி ஆற்றிய உரைகளில் சில இவற்றில் விடுபட்டுள்ளதாகவே கருதுகிறேன். பவளவிழாவை முன்னிட்டு வெளியிடப் படும் இவ் வெளியீட்டை ஆக்கியுள்ள எமது பிரச்சாரச் செய்திப் பிரிவும் பத்திரிகைக் குழுவும் பாராட்டுக்கு உரியன.

பவளவிழா காணும் தோழர் எம்.கே. பல்லாண்டு வாழ்ந்து அவரது புரட்சிகர சேவையைச் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்திற்கு வழங்க வேண்டும்.

சர்வதேச விடுதலைக்காகப் போராடி வரும் எமது தோழருக்கு ஈழமக்களின் சார்பாகவும், ஈழமக்கள் புரட்சி கர விடுதலை முன்னணியின் சார்பாகவும் புரட்சிகர வாழ்த்துக்களை உரித்தாக்குகின்றோம்.

**க. பத்மநாபா**
செயலாளர் நாயகம்
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி. (EPRLF)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழப் போரில் தோழர் எம். கே.யின் புரட்சிகர அணுகுமுறையைப் பின்பற்றுவோம்

இன்றையதினம் உலகம் முழுவதும் மிகப் பெரிய யுத்த அபாயத்தை நோக்கித் தள்ளப் பட்டுக் கொண்டிருப்பதை இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் உண்மையான இயக்கங்களும், சமாதான விரும்பிகளும் உணர்ந்துள்ளனர்.

சர்வதேச சமாதான சக்திகளுக்கும், சோசலிச முகாமுக்கும், வளரும் நாடுகளுக்கும் சகலவித நெருக்கடிகளையும், ஆயுத அச்சுறுத்தலையும் உண்டாக்குவதில் ஏகாதிபத்தியம் முனைந்து செயல்பட்டு வருகிறது. குறிப்பாக ஆசியப் பகுதியில் இந்தியத் திரு நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து உண்டாக்கும் நோக்கத்துடன் சுற்றிலும் உள்ள நாடுகளை நமக்கு எதிராகத் திருப்புவதில் அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதன் இணை சக்திகளும் பெருமளவில் வெற்றி பெற்றுள்ளன.

இத்தகைய சூழ்நிலையில் சமீப காலமாக இலங்கையில் அதிகரித்துவரும் இனப் படுகொலைகள் நமது நாட்டு மக்களில் பெரும் பகுதியினருக்குக் கவலையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. சிறீலங்கா நவபாசிச அரசானது நமது தமிழ்ச் சகோதரர்களை மிருகத்தனமாகப் படுகொலை செய்வதுடன், தொன்மைமிக்கத் தமிழ்க் கலாச்சாரத்தை அழிப்பதற்கும் தீவிரமாகப் பணியாற்றி வருகிறது. வெலிக்கடை சிறையில் ஈழப் போராளிகளையும், தமிழ்க் கைதிகளையும் இராணுவத்தின் பக்க பலத்துடன் சிங்கள இன வெறியர்கள் காட்டுமிரண்டித்தனமாகப் படுகொலை செய்தது மனித குல நாகரீகத்துக்கு விடப்பட்ட சவாலாகும்.



அப்பாவி மக்களைப் படுகொலை செய்வதிலும், பாசிச வெறியுடன் ஆட்சி செய்வதிலும் இட்லரையும் மிஞ்சி விட்டார் ஜெயவர்த்தனே. அவருடைய இனவெறி ஆதிக்க அரசுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியமும், சர்வதேசக் கொலைக்கார கும்பலான சியோனிச இஸ்ரேலும், தென்னாபிரிக்காவும் பக்கத்துணையாக நிற்கின்றன. இத்தகைய சூழ்நிலையில்தான் இனப்படுகொலையில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், தமது விடுதலைக்காகவும் ''இனிப் பொறுப்பதில்லை'' என வீரமிக்கத் தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்திப் பாசிச சிறீலங்கா அரசை எதிர்த்துப் போராடி வருகின்றனர்.

ஈழத்திலே இன்று நடந்துவரும் நிகழ்வுகள் வெறும் மனித உரிமைக்கான போராட்டம் என்ற நிலையிலிருந்து மாறுபட்டு விடுதலைப் போராட்டமாக வளர்ந்துவருவதை இங்குள்ள மார்க்சிய-முற்போக்காளர்கள் மறுதலித்தல் தவறானதாகும்.

இன்றைய தினம் சிறீலங்காவில் சுயாதிபத்திய அரசு இருப்பதாக எவரும் கருத இடமில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நவீன காலனியாதிக்க நாடாக சிறீலங்கா மாறி விட்டது. ஜெயவர்த்தனே தலைமையிலான அரசு சர்வதேச ஏகாதிபத்தியத்தின் கட்டளைகளை நிறைவேற்றும் பொம்மை அரசாக மாறிவருகிறது.

தெற்கு ஆசியாவில் பாகிஸ்தான், வங்காளதேசம், நேபாளம், சிறீலங்கா போன்ற நாடுகளை எல்லாம் தன் நவீன காலனியாதிக்கத்தின்கீழ்க் கொண்டு வருவதில் அமெரிக்க ஏகாதிபத்தியம் கிட்டத்தட்ட வெற்றியடைந்து வருகிறது. அதே நேரத்தில் கூட்டுச்சேரா நாடுகளின் தலைமைப் பொறுப்படை வகிக்கும் இன்றைய இந்திய அரசின் வெளி நாட்டுக் கொள்கைகளாலும், பொருளாதாரத் துறையில் சுயகாலில் நிற்பதற்கான முயற்சியாலும் சோசலிச நடுகளுடன் இன்றைய இந்திய அரசு கொண்டுள்ள நெருக்கத்தினாலும் ஏகாதிபத்தியம் ஆத்திரம் அடைவது இயல்பே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்திய நாட்டைச் சுற்றிலும் பகைப்புலத்தை உருவாக்கி நம் நாட்டின் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலை உண்டாக்கி மிரட்டும் வகையில் அண்டை நாடுகளுக்கு அமெரிக்கா ஆயுத உதவி அளிக்கிறது.

மேலும் இந்துமா கடலில் டியாகோகாசியா தீவில் தனது அணு ஆயுதத்தளத்தையும் நிறுவியுள்ளது. ஈழத்தில் திருக்கோணமலையில் ஆயுதத்தளம் அமைப்பதன் மூலம் இந்துமாக்கடல் பகுதி முழுவதையும தன்கட்டுக்குள் கொண்டு வந்து இந்தியா மீது ஆயுத, பொருளாதார நிர்ப்பந்தங்களை உண்டாக்குவதே ஏகாதிபத்தியத்தின் திட்டமாகும்.

ஈழத் தமிழர்களின் தாயகமான ஈழத்தில் அமைந்துள்ள திருக்கோணமலையைத் தன் வயப்படுத்துவதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் சிறீலங்கா அரசைத் தூண்டி விட்டு ஈழமக்கள் மீதான இராணுவ மேலாதிக்கத்துக்குக் காரணமாக இருக்கிறது. இனி இழப்பதற்கு எதுவுமில்லை என்ற நிலையில் தமிழ் மக்கள் ஈழம் வேண்டி மகத்தான விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ளனர்.

ஆகவே ஈழ விடுதலைப் போரானது சிங்களப் பேரினவாதத்துக்கு எதிரான தமிழ் மக்களது போராட்டமாக மட்டுமல்லாது. ஏகாதிபத்தியத்தின் நவின காலனியாதிக்கக் கொள்கைக்கு எதிரான விடுதலைப் போராகவும் வடிவெடுத்துள்ளது.

மேலும் இந்துமாக் கடலை அமைதி மண்டலமாக்கும் பணியை உத்தரவாதப்படுத்துவதும், ஏகாதிபத்தியம் இந்தியா மீது தொடுத்துள்ள மறைமுகமான யுத்தத்தில் வெற்றி கொள்வதும், சுதந்திர சோசலிச ஈழம் அமைவதைப் பொறுத்தே உள்ளது.

அதேவேளையில் ஈழ விடுதலை இயக்கங்கள் அனைத்தும் தங்களுக்குள் உள்ள வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட்டுப் போராடினால் இறுதி வெற்றி விரைவில் கிட்டும் எனபதே இந்திய தமிழர்கள் ஆகிய நமது கருத்தாகும்.



''நாம் மக்கள் மத்தியில் தீவிரமாக அரசியல் வேலையில் ஈடுபட்ட போதுதான் மார்க்சிய, லெனினியத்தை அறிந்து கொண்டோம். அதைக் கற்றுக் கொண்டோம். தெளிவாகப் புரிந்தும் கொண்டோம்'' என்கிறார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமும், தெளிந்த மார்க்சியவாதியுமான தோழர் பத்மநாபா.

மார்க்சிய இலட்சியத்தை ஏற்றுக்கொண்டவர்கள் தோற்றதாகச் சரித்திரம் கிடையாது.

சோசலிசத் தாயகம் வேண்டிப் போரிடும் ஈழ மக்களுக்கு உதவ வேண்டியது மார்க்சியத் தத்துவத்தில் நம்பிக்கை கொண்ட இந்தியத் தமிழர்கள் மற்றும் அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இயக்கங்களது கடமையாகும். இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் மகத்தான தலைவரும்; இந்திய விடுதலைப் போரில் நேரடிப் பங்கு கொண்டவருமான தலைவர் தோழர் எம். கல்யாணசுந்தரம் அவர்கள் ஈழமக்கள் போராட்டத்தின் பால் சரியான பார்வையுடன் செயலாற்றி வருவது இளைஞர்களுக்கு வழிகாட்டுவதாக உள்ளது.

ஈழ மக்கள் மீது 1981-ம் ஆண்டில் சிங்கள பேரினவாத அரசு காட்டுமிராண்டித்தனத் தாக்குதல் தொடுத்தது, யாழ்ப்பாணத்தில் நூலகத்தைத் தீயிட்டுக் கொளுத்தியது. இதைத் தோழர் எம். கே. வன்மையாகக் கண்டித்ததுடன் ஈழம் சென்று நிலையை நேரில் மதிப்பிட்டு இந்திய அரசிடம் தெரிவித்தார்.

மேலும் இன்றைய சூழ்நிலையில் இலங்கைப் பிரச்சனையின் மீது இந்திய அரசைத் தீவிர கவனம் செலுத்த வைப்பதிலும் தோழர் எம். கே. அவர்களது பங்கு மிகப் பெரியதாகும்.

ஒப்பற்ற தலைவர் தோழர் எம். கே.யின் ஒத்துழைப்பால் ஈர்க்கபபட்ட ஈழ மக்களின் அமைப்பான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இவ் வெளியீட்டைக் கொணர்வது இந்திய மார்க்சியவாதிகளைப் பெருமைப் படுத்துவதாகும்.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான தோழர் எம். கே யின் வழியில் ஈழப் போராளிகளுக்காக நாமும் ஒத்துழைப்போம் என சபதம் ஏற்போம்.

**எஸ். பாஸ்கரன்**

www.tamilarangam.net

# தோழர் எம். கே. அவர்களின் புரட்சிகர வாழ்க்கைக் குறிப்பு

★ 19 வது வயதில் 1928 ம் ஆண்டு பொன்மலை ஒர்க் ஷாப்பில் ஸ்டோர் டிப்பார்ட்மென்டில் வேலைக்குச் சேர்ந்தார்.

★ உப்புச் சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு இயக்கம், சைமனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றால் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு பெற்று இந்திய தேசிய விடுதலைப் போராட்ட அரங்கில் பிரவேசித்தார்.

★ 1934 - 35 ல் இந்திய காங்கிரசில் சேர்ந்தார். தொடர்ந்து ஒன்பது ஆண்டுகள் திருச்சி வட்ட காங்கிரஸ் தலைவராகப் பணியாற்றினார். 1935 காங்கிரஸ் பொன்விழா ஆண்டில் ஐக்கிய வாலிபர் சங்கம் என்ற அமைப்பையும் நிறுவி, வாலிபர்கள் மத்தியில் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை வளர்த்தார்.

★ ஆங்கிலேய ரயில்வே கம்பெனியில் தொழிலாளர்களின் அடிமை முறைக் கொடுமைகளை உணர்ந்து தொழிலாளிகளை அமைப்பு ரீதியாக அணி திரட்டி ஆங்காங்கு ரயில்வே தொழிற் சங்கங்களை அமைத்தார்.

★ 1938 ல் பொன் மலையில் ரயில்வே தொழிற் சங்கங்களின் ஒருங்கிணைப்பு மாநாட்டை நடத்தி மத்திய சங்கத்தைத் தோற்றுவித்தார். ''தொழிலரசு'' என்ற பத்திரிகையையும் தோற்றுவித்தார்.



★ ஆண்டுதோறும் தொழிற் சங்க ஆண்டு மாநாடுகளை கலை, இலக்கிய, அரசியல் மாநாடாக நடத்தினார்.

★ அம் மாநாடுகளில் அரசியல்வாதிகளும், கலை இலக்கிய மேதைகளும் கலந்துகொண்டனர்.

★ தொழிலாளர்களின் எழுச்சி கண்டு இத் தொழிலாளி வர்க்கம்தான் ஏகாதிபத்தியத்தை ஒழித்து மாற்று அரசை அமைக்க வல்லது என அனுபவ ரீதியாக உணர்ந்து பொதுவுடைமைவாதியானார்.

★ பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினால் தடை செய்யப்பட்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களான தோழர்கள் எஸ். வி. காட்டே, ஜீவா, பி. ராமமூர்த்தி, அனந்த நம்பியார், பாலன், மோகன் போன்றவர்களுடன் தொடர்பு கொண்டார்.

★ தடைசெய்யப்பட்ட கம்யூனிசக் கட்சியின் அரசியல் கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதிலும், சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் மே தினத்தைத் தமிழகத்தில் கொண்டாடுவதிலும் முன்னின்று பணியாற்றினார்.

★ ஏகாதிபத்திய எதிர்ப்பு, தொழிலாளர் வர்க்க உணர்வு, தேசிய உணர்வு கொண்டு சிறந்த கம்யூனிஸ்ட்டாக பரிணமித்தார்.

★ இவரால் உணர்வு பெற்ற தொழிலாளர்கள் 1940-ம் ஆண்டு போராடியபோது இவரைக் கைது செய்தால் போராட்டம் ஓயும் என எண்ணிக் கைது செய்தனர்; ஆனால் போராட்டம் தீவிர மடைந்தது. இவர் விடுதலை செய்யப்பட்டார்.

★ 1946-ல் பொன்மலை தொழிற் சங்க வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்தார். அப்போது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஐந்து பேர்களப் பலியானார்கள்; 300 பேர் படுகாயமடைந்தனர். இப் போராட்டத்துக்கு முதல் நாள் தோழர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பயங்கரவாதிகள் என்று வர்ணிக்கப்பட்ட அவர்கள் எவ்வளவு மனித நேயம் மிக்கவர்கள் என்பதை உலகுக்கு உணர்த்தி விட்டனர்.

**குற்றவாளிக் கூண்டில் ஜெயவர்த்தனே**

இப்பொழுது குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளது ஜெயவர்த்தனேயின் அரசாகும். அவரது ஆட்சியின் ராணுவக் கொலை வெறி நடவடிக்கைகளை எதிர்த்து ஈழத்துத் தமிழ் மக்களைப் பாதுகாக்கவே அந்த இளைஞர் படை பணியாற்றுகிறது என்பதும் அவர்கள் பயங்கர வாதிகள் அல்ல என்பதும் இந்த நிகழ்ச்சியின் மூலம் வெளியாகின்றது.

**உளவாளிகள் இப்போது எங்கே ?**

விடுதலையடைந்த பணயக் கைதிகளை ஜெயவர்த்தனே தன் ராணுவத்தின் காவலில் வைத்துக் கொண்டு அவர்களை உலகறிய வெளியே கொண்டு வருவதற்கு முன்பு அவர்கள் தங்கள் அனுபவத்தை எவ்வாறு வெளியே கூறவேண்டும் என்று சொல்லிக் கொடுப்பதற்காகவும் முடிந்தால் அவர்கள் வைக்கப்பட்டிருந்த இடத்தைப் பற்றி ரகசிய ராணுவப்படை துப்புக் கண்டு பிடிப்பதற்காகவும் ஒரு பாசாங்கு நடத்தப் படுகிறது என்று யூகிக்க வேண்டியிருக்கிறது.

**இந்தியா மீது அவதூறு**

அமெரிக்கத் தம்பதிகள் கடத்தப்பட்டவுடன் அவசர அவசரமாக ஜெயவர்த்தனேயின் பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத் முதலி கடத்தப்பட்டவர்களை இந்தியாவுக்குக் கொண்டுபோய்விட்டதாக ஒரு புரளியைக் கிளப்பி விட்டு இந்திய அரசுக்கும் தமிழ்நாடு மாநில அரசுக்கும் எதிராக உலகத்தின் கவனத்தைத் திருப்பிவிட முயற்சி செய்ததை மறக்கமுடியாது. இருப்பினும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும், தமிழக முதல்வர்



எம். ஜி. ஆரும் அவர்களை விடுவிக்க வேண்டியதற்காகத் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்தனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இதர எதிர்க் கட்சிகளும், தமிழர் விடுதலை முன்னணி தலைவர் அமிர்தலிங்கமும் அதேபோல் வேண்டுகோள் விடுத்தனர். இந்திய அரசின், இந்திய மக்களின் நல்லெண்ணத்தை இது காட்டுகிறது.

**இந்தியாவின் மீது பகைமையை வளர்க்காதே**

இனியாகிலும் ஜெயவர்த்தனேயின் அரசு தமிழர் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண்பதற்கு முன்வருமா?

இந்தியா மீது பகைமை உணர்வை வளர்ப்பதை நிறுத்துமா ?

அமெரிக்காவின் அடிவருடிகளாக ஆட்சி நடத்துபவர்களுக்கு அவரவரின் நாட்டில் ஏற்படுகின்ற கதியை ஜெயவர்த்தனேயின் அரசு புரிந்து கொள்ளவேண்டும். இலங்கை மக்களுக்கும், இந்திய மக்களுக்கும் இடையே தொன்று தொட்டு வளர்ந்துவரும் நல்லுறவைச் சிதைத்துவிட்டுப் பகைமையை வளர்த்துவிட முயற்சிக்கின்ற அமெரிக்காவின் சதியையும் ஜெயவர்த்தனே ஆட்சியின் நடவடிக்கைகளையும் தமிழ்நாட்டு மக்கள் இந்தியமக்களுடன் சேர்ந்து நின்று கண்டிக்க வேண்டும்.

**—எம். கே.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தமிழ் நாளிதழ் ***ஜனசக்தி***யில் வெளியிடப்பட்டது.

www.tamilarangam.net

# சிறீலங்கா அரசின் தந்திரங்கள்

இலங்கையில் தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்கள், கச்சத்தீவு அருகே இந்தியக் கடற்பகுதியிலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடிப் படகுகளில் வலுக் கட்டாயமாக ஏற்றப்பட்டு மீண்டும் இலங்கைக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள். அவர்கள் இந்தியாவிலிருந்து இந்தப் படகுகளில் கள்ளத் தனமாக வந்ததாக அபாண்டமாகப் பழி சுமத்தப் படுகிறார்கள்.

இந்தத் தமிழ் இளைஞர்கள் ''இந்தியாவில் பயிற்சி பெற்ற பயங்கரவாதிகள்'' என இலங்கை அரசு வீண் பழி சுமத்துகிறது.

இலங்கையில் தமிழர்களது உரிமைகளுக்காகப் போராடும் இந்த இளைஞர்கள் மீது வீண்பழி சுமத்தி படுகொலை செய்வதற்காக இலங்கை அரசு இத்தகைய தந்திரங்களைக் கடைப்பிடிக்கிறது.

கச்சத்தீவைச் சுற்றியுள்ள பகுதிகளில் இலங்கைக் கடற்படை நவீன ஆயுதங்களுடன் நடமாடுகிறது. இதனால் அப்பிராந்தியத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

நமது கடல் எல்லைப் பகுதிகள் அத்துமீறப் படுகின்றன. கச்சதீவை வேவுதளமாக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன, இவற்றை இந்திய அரசு வெறுமனே பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமுடியாது.

பாக். ஜலசந்திப் பகுதியில் தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப் படுவதைத் தடுத்து நிறுத்தவும், இலங்கை அரசின் ஆத்திர மூட்டும் நடவடிக்கைக்கு முடிவு கட்டவும் மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**—எம். கே.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# படை வரிசைக்கு...

இந்தியத் தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியிலும், பரந்துபட்ட மக்களிடமும் கம்யூனிசக் கருத்துக்களை ஆழ விதைக்கும் பணியில் நீண்டகால அனுபவம் கொண்டவர் தோழர் எம். கே.

தோழர் அவர்களின் புரட்சிகர அனுபவங்கள் தொழிலாளர் வர்க்க ஆட்சி அதிகாரத்தை இலக்காகக் கொண்டு சர்வதேசமெங்கும் போராடும் படை வரிசைகள் சுவீகரித்துக் கொள்ள வேண்டியவையாகும்.

தோழர் பத்மநாபா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்